Registered as a Newspaper in Ceylon ★ ☆ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தொலைபேசி எண். 49 மலர் 10
இதழ் 159
National Tamil Daily தேசிய தினசரி

சந்திரோதய விசுவ ஆடி 4 சபி ஆதிர் 22 வெள்ளிக்கிழமை (19 7-68)



பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

### மாவிட்டபுரம் ஆலயப் பிரவேச விவகாரம்

# மாஜி எம். பி. மீதான தடை நீடிப்பு; விசாரணை ஒத்திவைப்பு

## மனுதார் தாக்கப்பட்டதால் நீதிமன்றத்துக்கு வரவில்லை

யாழ்ப்பாணம், வெள்ளி

முன்னாள் வவுனியா எம். பி. யும், விடுதலை இயக்கத் தலைவருமான திரு. சி. சுந்தரலிங்கம் மீதான தடை உத்தரவு விசாரணை ஆகஸ்ட் மாதம் 5-ம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெறும். அதுவரை தற்பொழுது அவர் மீது விதிக்கப்பட்டுள்ள இடைக்கால உத்தர தொடர்ந்து இருக்கும்.

யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி ஜனாப் ஐ. எம். இஸ்மயில் முன்னிலையில் நேற்றுக் காலை திரு. சி. சுந்தரலிங்கம் சார்பில் ஆஜரான அட்வகேட் சி. பொன்னம்பலம் மறுமொழி அணைத்தார்.

எதிர்மனுதாரரான சி. சுந்தரலிங்கம் கோர்ட்டிற்கு வந்திருந்தார் மனுதாரரான சி. கணேசன் நேற்று கோர்ட்டில் ஆஜராகவில்லை.

விசாரணையைப் பார்ப்பதற்கு கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர்

நேற்று முதலாவது வழக்காக, தடை உத்தரவு விசாரணை பற்றிய வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

(6ம் பக்கம் பார்க்க)

## அரசாங்க அதிபர் - பொலிஸ் அதிபர் ஆலோசனை
### ஆலயப்பிரவேசப் பிரச்னைக்கு கடைசி நேர சுமுக முயற்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஹரிஜன ஆலயப் பிரவேசம் சம்பந்தமான அமைதிக்கு பங்கம் ஏற்படாதவகையில் சுமுகமான சில நடவடிக்கைகளை கடைசி நேரத்திலாவது மேற்கொள்வதற்கு வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், ஆலய பிரதம அர்ச்சகருக்கு நேற்றுக் காலை சில யோசனைகளைத் தெரிவித்ததாகவும் இந்த யோசனைகள் பற்றி மற்றும் தர்மகர்த்தாக்களுடன் கலந்தாலோசனை செய்தபின் இன்று மாலைக்குள் முடிவு தெரிவிப்பதாக பிரதம அர்ச்சகர் பதிலளித்ததாகவும் அறியப்படுகிறது.

ஆலயத்தில் இப்பொழுது பணியாற்றியவரும் தொண்டர்படையைக் கலைத்துவிடு

[6-ம் பக்கம் பார்க்க]

## பொலிசார் பாரபட்சமாக நடப்பதாக குருக்கள் புகார்
### பொலிஸ் அதிபர், பிரதமருக்குதந்தி

அளவெட்டி, வியா.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆலயப் பிரவேச விஷயத்தில் பொலிசார் பாரபட்சமாக நடந்துகொள்கின்றனர். இதுபற்றி உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும்.''

இவ்வாறு கூறும் தந்தியொன்றை மாவிட்டபுரம் கந்தசாமிகோவில் பிரதம குருவான திரு. து. சண்முகநாதக்குருக்கள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபய குணவர்த்தனாவுக்கு நேற்று அனுப்பிவைத்துள்ளார்.

இத்தந்தியின் பிரதிகள் பிரதமமந்திரி, உள்நாட்டமைச்சர் திரு. தகநாயக்கா திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## தமிழர்களுக்குள் பிரிவினை ஏற்படுத்த முயல்கிறார்கள்
### ஆர். ஜி., எதிர்க்கட்சியினருக்கு உடுவில் எம். பி. சாட்டை

கொழும்பு, வியாழன்

''அச்சுவேலியில் ஹரிஜனர்களுக்கு வீடமைப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது இதனை ஆட்சேபித்த ஆர். ஜி. சேனநாயக்கா போன்றவர்களும் எதிர்க்கட்சியினரும் இப்பொழுது ஹரிஜனர்களுக்காகமுதலைக் கண்ணீர் வடிப்பது வியப்பாகவுள்ளது. தமிழர்களுக்குள் வீண் பிரிவினையைத் தோற்றுவித்து குழப்புவதற்காகவே இவர்கள் இதைப் பெரிதுபடுத்துகிறார்கள்'' என்று உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் இன்று ஆட்சிமன்றத்தில் கூறினர்.

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைமீதான விவாதத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

திரு. தர்மலிங்கம் மேலும் பேசுகையில் சொன்னதாவது:-

சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச் சட்டத்தை 1957ல் முதல்முறையாக கொண்டு

[6-ம் பக்கம் பார்க்க]

### அதிர்ஷ்டசாலிகள் இவர்கள்

## பலப்பிட்டி தொழிலாளிக்கு 'ஜாதிகசம்பத' முதற்பரிசு
### பட்டதாரி இளம் பெண் இரண்டாவது பரிசு பெற்றார்

கொழும்பு, வியா.

பலப்பிட்டித் தொகுதியைச் சேர்ந்த கட்டுலா என்னுமிடத்தில் வசிக்கும் 44 வயதான பி. பால்தசார் டி சில்வா என்னும் தொழிலாளிக்கு ஜாதிக சம்பத சுவீப்பின் முதல் பரிசுத் தொகையான இரண்டு லட்சத்து இரண்டாயிரத்து இருநூற்றிஐம்பது ரூபாய் கிடைத்திருக்கிறது.

முதல் பரிசுக்குரிய 14 E 001147 இலக்க சுவீப் டிக்கட்டுடன் தனது மனைவியையும் ஒரு குழந்தையையும் கூட்டிக்கொண்டு பொலிஸ் பாதுகாப்புடன் திரு. பால்தசார் டி சில்வா இன்று தேசிய லொத்தர்சபைக் காரியாலயத்துக்கு வந்து தமது பரிசுக்குரிய சுவீப் டிக்கட்டைச் சமர்ப்பித்தார் நான்கு பிள்ளைகளுக்கு தந்தையான திரு சில்வாவுக்கு தாயும் தந்தையும் இருக்கின்றனர்.

### இளம் பெண்ணுக்கு இரண்டாவது பரிசு

இரண்டாவது பரிசுத் தொகையான ஓர் இலட்சத்து 21 ஆயிரத்து 350 ரூபாய் களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த நபொடா என்னுமிடத்தில் வாழும் செல்வி ஞானசீலி விஜயசிங்கா என்னும் 26 வயதான இளம்பெண்ணுக்குக் கிடைத்திருக்கிறது. பேராதனைப் பல்கலைக்கழகத்துப் பட்டதாரியான இப் பெண்ணுக்கு இரண்டு சகோதரர்களும் ஓர் சகோதரியும் உள்ளனர்.

## 203-வது சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியாழன்

தேசிய லொத்தர் சபையின் 203-வது சுவீப் சீட்டிழுப்பு இன்று மாலை இரத்மலானையில் இழுக்கப்பட்டது. முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
14 J 0934 ரூ. 87, 490

இரண்டாவது பரிசு
23 O 0233 ரூ 34, 996

மூன்றாவது பரிசு
23 V 0352 ரூ. 8, 749

தலா ரூபா 437 45 சதம் பரிசுபெறும் 100 டிக்கட்டுகள்.

| | |
|---|---|
| 02 U 0353 | 10 M 0785 |
| 35 N 0192 | 09 W 0714 |
| 34 R 0296 | 21 U 0689 |
| 17 A 0810 | 16 X 0628 |
| 37 Y 0564 | 12 Q 0419 |
| 24 Q 0175 | 10 D 0729 |
| 30 K 0510 | 37 C 0275 |
| 37 H 0448 | 22 D 0982 |
| 15 Y 0230 | 36 B 0052 |
| 36 B 0070 | 40 J 0003 |
| 35 E 0394 | 12 A 0611 |
| 34 V 0991 | 15 P 0665 |
| 27 C 0334 | 22 R 0024 |
| 36 Q 0437 | 13 C 0174 |
| [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] 0797 |

(6ம் பக்கம் பார்க்க)

## தமிழ் வாலிபர் தனித் தமிழ்நாடு கோருகின்றனர்
### ஆட்சிமன்றத்தில் நவரத்தினம்

''தமிழர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை தமிழரசுக்கட்சி மறந்துவிட்டது. தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு தமிழரசுக் கட்சி துரோகம் இழைத்துவிட்டது'' என்று ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் ஆட்சிமன்றத்தில் இன்று கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் பிரதமர் 'வாஷிங்டன் போஸ்ற்' என்ற அமெரிக்க பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் நமது அரசாங்கம் தன்னுடன் சேர்ந்துள்ள அரசியல் கட்சியினை விழுங்கிவிட்டதாக தெரிவித்திருக்கிறார். இதனால் தமிழரசுக்கட்சிதனது தனித்தன்மையை இழந்துவிட்டது என்பது வெளிப்படையாகிவிட்டது.

தமிழ் வாலிபர்கள் தனித் தமிழ்நாட்டை இப்பொழுது கோரத் தொடங்கிவிட்டார்கள்.

தமிழர்கள் சிங்கக்குட்டிகள். உறங்கிக் கிடக்கும் சிங்கக்குட்டிகளை தட்டிவிட்டால், எழுந்தே போராடுவார்கள் என்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு ஐரோப்பாவில் உருவாகி வரும் ஆபத்தான நிலைமை

## செக்கோஸ்லாவியாவுக்கு வார்ஸோ நாடுகளின் எச்சரிக்கை

### டிட்டோ பிராக் செல்கிறார்

பிராக், ஜூலை 18

செக்கோஸ்லாவாக்கியாவிலுள்ள நிலைமையையிட்டு வார்ஸோவில் கூடி விவாதித்த ரஷ்யா, கிழக்கு ஜெர்மனி, போலாந்து, ஹங்கேரி, பல்கேரியா ஆகிய ஐந்து நாடுகளும் கூட்டாகச் செக்கோஸ்லாவாக்கிய அரசாங்கத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், செக்கோஸ்லாவாக்கிய அரசியல் நிலைமை, கம்யூனிஸ்ட் நாடுகள் அனைத்தினதும் பொதுவான, பிரதான நலன்களுக்கு ஆபத்தாக விளங்குவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கம்யூனிஸ்ட் உலகின் ஒற்றுமையையும், கட்டுப்பாட்டையும் குலைக்கும் சக்தி, உள்ளிருந்து வந்தாலும் சரி, வெளியேயிருந்து வந்தாலும் சரி, அனுமதிக்கப்பட முடியாதென்று அக்கடிதம் மேலும் தெரிவித்துள்ளது. ஐரோப்பாவில் நிலவும் சமபல நிலை பாதிக்கப்படுவதை அனுமதிக்க வேண்டாமென ஐரோப்பிய கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு வார்ஸோ மாநாட்டு நாடுகள் ஐந்தும் கோரிக்கை விடுத்துள்ளன.

செக்கோஸ்லாவாக்கியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவது தமது நோக்கமல்லவென்றும், கம்யூனிஸத்தின் மீது செய்யப்படும் தாக்குதல்களை எதிர்த்து முறியடிப்பது கம்யூனிஸ்ட் நாடுகளின் பொதுவான பாதையாகும் என்பதைச் செக்கோஸ்லாவாக்கியாவுக்குத் தாம் நினைவுறுத்த விரும்புவதாக அந்நாடுகள் தமது கடிதத்தில் எச்சரித்துள்ளன.

#### எதிர்ப்பு சக்திகளுக்கு இடமளிக்கவேண்டாம்

நாட்டில் கம்யூனிஸ எதிர்ப்புச் சக்திகளுக்கு இடமளிக்கவேண்டாமென்று செக்கோஸ்லாவாக்கிய ஆட்சியாளரைக் கேட்டுக்கொண்டுள்ள வார்ஸோ நாடுகள், பத்திரிகை, ரேடியோ, டெலிவிஷன் ஆகிய சாதனங்களை எல்லாம் அரசாங்கம் தனது கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளது.

வார்ஸோ நாடுகள் அனுப்பியுள்ள இக்கடிதத்துக்குச் செக்கோஸ்லாவாக்கிய ஆட்சியாளர் தமது பதிலை இப்போது உருவாக்கிவருகிறார்கள்.

#### இத்தாலிய, பிரெஞ்சு கட்சிகள்

இதற்கிடையில், செக்கோஸ்லாவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய சுதந்திரக் கொள்கைக்கு ஏற்கனவே தனது ஆதரவை வெளியிட்டுள்ள இத்தாலிய கம்யூனிஸ்ட் கட்சி, செக்கோஸ்லாவாக்கிய நிலைமையை ஆராய ஒரு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் மாநாடு அழைக்கப்பட வேண்டுமென்ற பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சியின் யோசனையை வரவேற்றுள்ளது.

#### பிராக்குக்கு டிட்டோ

யூகோஸ்லவியாவின், ஜனாதிபதி டிட்டோ, செக்கோஸ்லாவாக்கியவுக்குத் தமது ஆதரவை வெளியிட்டுள்ளதுடன், செக்கோஸ்லவாக்கியாவுடனான யூகோஸ்லாவிய உறுதிப்பாட்டைத் தெரிவிக்குமுகமாக விரைவில் பிராக்குக்கு விஜயம் செய்யவிருக்கிறார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஈராக் ஜனாதிபதி ஆரிப் லண்டன் வந்துள்ளார்

## முன்னாள் பிரதமர் ஒருவர் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு

லண்டன், ஜூலை 18

ஈராக்கில் நேற்று நடைபெற்ற இராணுவப் புரட்சியைத் தொடர்ந்து நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட ஈராக் ஜனாதிபதி ஆரிப், பிரிட்டிஷ் தலைநகரான லண்டன் வந்துசேர்ந்துள்ளார். அவரது மனைவியும், மற்றும் அவரது குடும்பத்தவரும் ஏற்கனவே லண்டன் வந்துள்ளனர்.

பாக்தாத்தில், ஆரிப்பைப் பதவியிலிருந்து நீக்கிய இராணுவப் புரட்சிச் சபையினர் அவருடைய இடத்தில், முன்னாள் பிரதமர் ஒருவரான மேஜர் ஹஸான் அல் பக்கரை நியமித்துள்ளது.

தற்போதைய இராணுவத் தளபதியையும், மற்றும் சில சிரேஷ்ட இராணுவ உத்தியோகத்தர்களையும் புரட்சிச் சபை பதவி நீக்கஞ்செய்துள்ளது.

பாக்தாத்திலிருந்து கிடைக்கும் செய்திகள், இரத்தக்களரி எதுவுமின்றி இராணுவப்புரட்சி நடந்தேறியதாகத் தெரிவிக்கின்றன. ஆனாலும், பாக்தாத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பலத்த வெடிச் சப்தங்கள் கேட்டதாகச் சில வட்டாரங்கள் கூறின.

புரட்சிச்சபை வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில், ஈராக்கை மேலும் பலப்படுத்துவதுடன், அதன் விவசாய, கைத்தொழில் துறைகளில் உற்பத்தியைப் பெருக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமென உறுதியளிக்கப்பட்டுள்ளது.

# ஹொனலூலுவுக்கு ஜோன்ஸன்

## வியட்னும் பேச்சுக்கள்

வாஷிங்டன், ஜூலை 18

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸன் இன்று ஹொனலூலு புறப்பட்டுச் செல்லுகிறார். அங்கு, தென் வியட்னும் ஜனாதிபதி தியூவுடன் ஜோன்ஸன் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்.

ஜனாதிபதி ஜோன்ஸனுடன், அமெரிக்கப் பாதுகாப்பு மந்திரி திரு. ஆர்தர் கிளிபோர்ட், வெளியுறவு மந்திரி திரு. டீன் ரஸ்க், அமெரிக்க முப்படைத் தளபதி ஜெனரல் வீலர் ஆகியோரும் செல்கின்றனர்.

வியட்னும் நிலைமை பற்றி ஜனாதிபதிகள் இருவரும் பொதுவாக விவாதிப்பர்.

# 'இஸ்ரேலே தடையாகவுள்ளது'

கெய்ரோ, ஜூலை 18

சூயஸ்கால்வாயில் சிக்கியுள்ள 13 கப்பல்களையும்விடுவிப்பதற்கு தாம் தயாராகவிருப்பதாகவும், இஸ்ரேலே இதற்குத் தடையாகவுள்ளதாகவும் இன்று ஐக்கிய அரபுக் குடியரசு வெளியுறவு மந்திரி திரு. முகம்மது றியாத் இங்கு தெரிவித்தார்.

வெளிநாட்டுக் கப்பல் கம்பனிப் பிரதிநிதிகள் இவரைச் சந்தித்துப் பேசியபோது அவர் இத்தகவலை வெளியிட்டார்.

# நான்குநாடுகளின் புதிய போர் விமானம்

லண்டன், ஜூலை 19

பிரிட்டன், மேற்கு ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாந்து ஆகிய நான்கு நாடுகளும் இணைந்து, புதிய இராணுவ விமானமொன்றை உருவாக்கத் திட்டமிட்டுள்ளன.

தற்போது இராணுவ வட்டாரங்களில் அதிக சக்திவாய்ந்த அமெரிக்க 'ஹோக்' போர் விமானத்தைவிடப் பலம் வாய்ந்ததாக இதனை அமைக்கத் திட்டமிட்டு வருகிறார்கள்.

இந்த விமானத் திட்டத்தில் கனடாவும் அக்கறை கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்க

# அந்நியநாட்டு உதவித் திட்டம்

வாஷிங்டன், ஜூலை 18

அமெரிக்காவின் அந்நிய நாட்டு உதவித் திட்டத்துக்கான செலவில் மேலும் [illegible] பிரதிநிதிகள் சபைக்கு அனுப்பியுள்ள செய்தியொன்றில் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவ்விதம் செய்தால், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் அபிவிருத்தித் திட்டங்கள் பாதிக்கப்படுமென அவர் எச்சரித்துள்ளார்.

# உலகில் நல்ல உணவு உற்பத்தி

## ஐ. நா. அறிக்கை

நியுயோர்க், ஜூலை 18

ஆசியாவில் உணவு உற்பத்தி அதிகரித்துள்ளது. முதற்தடவையாக, 1960-ம் ஆண்டுகளில், உலகின் ஜனப்பெருக்கத்தை விவசாய உற்பத்தி தாண்டியுள்ளதென ஐ. நா. உலகப் பொருளாதார அறிக்கை இத்தகவலைத் தெரிவித்துள்ளது.

# ரொடீஷிய ஆளுங்கட்சியின் புதிய அரசியற் சாஸனம்

## சர்வம் வெள்ளையர் மயம்

சலிஸ்பரி, ஜூலை 18

ரொடீஷியாவில் பதவியிலிருக்கும் ஆளுங் கட்சியான ஐக்கிய முன்னணி, ரொடீஷியாவுக்கான புதிய அரசியல் சாஸனமொன்றுக்கான திட்டத்தை வெளியிட்டுள்ளது.

இப்புதிய அரசியற் சாஸனத்தின்கீழ், ரொடீஷியா ஒரு சுதந்திரக் குடியரசாகும்.

புதிதாகத் தெரிவுசெய்யப்படவிருக்கும் சட்ட அசெம்பிளியில், வெள்ளையர்களும், வெள்ளையர்களுக்கு ஆதரவான கறுப்புக்குடிகள் தலைவர்களும் பெரும்பான்மையினராக இருப்பர். ஆபிரிக்கப் பிரதிநிதிகள் சிறுபான்மையராக இருப்பர்.

மேலும் சபையில், வெள்ளையர்கள் அல்லது வெள்ளையர் ஆதரவான குடித் தலைவர்கள் அல்லது அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களே இருப்பர்.

ஆளுங் கட்சியினரின் இத்திட்டத்தை 'ரொடீஷியாவைச் சர்வ வெள்ளையர் மயமாக்கும் திட்டம்' என எதிர்க்கட்சியினர் கண்டித்துள்ளனர்.

# சோவியத்—இலங்கை வர்த்தகம்

மாஸ்கோ, ஜூலை 18

1969—1971க்கான புதிய சோவியத் இலங்கை வர்த்தக உடன்படிக்கைபற்றிப் பேச்சுவார்த்தைகளை நடாத்தவென சோவியத் தூதுக்குழுவொன்று கொழும்புக்கு விமானமூலம் சென்றுள்ளது. இவ்வுடன்படிக்கை இரு நாடுகளுக்குமிடையே யான வர்த்தகத்தை விஸ்தரிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த வருடம் நடைபெற்ற வர்த்தக அளவு 280 லட்சம் ரூபாய்களாகும்.

சோவியத் யூனியன் இலங்கையிடமிருந்து அதனது முக்கிய ஏற்றுமதிப் பொருட்களான ரப்பர், தேயிலை, தேங்காய்எண்ணெய் ஆகியவற்றினை வாங்குகிறது. இவை தவிரமெல்லாக் கைத்தொழிற் பொருட்களையும் அண்மையில் சோவியத் யூனியன் இலங்கையிடமிருந்து வாங்குவதற்கு ஆரம்பித்துள்ளது.

இலங்கை சோவியத் யூனியனிடமிருந்து முக்கியமாக எண்ணெய் பொருட்களை வாங்குகிறது. இது தவிர இயந்திரங்கள், உபகரணங்கள், சீனி, இரும்புத்தாதுகள், பருத்தித் துணிகள் ஆகியவற்றினையும் இலங்கை வாங்குகிறது.

பொருளாதாரக்கூட்டுறவு பற்றிய உடன்படிக்கையின் பூரண அமுல் சோவியத் இலங்கை வர்த்தகத்தை மேலும் விஸ்தரிப்படுத்த உதவும் என சோவியத் வட்டாரங்கள் நம்புகின்றன. இவ்வருடத்தில் சோவியத் வர்த்தகஸ்த பணிகள் உலோகத் தொழிற்சாலையை விஸ்தரிப்பதில் இலங்கை உதவிசெய்யுமென உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. தற்சமயம் இலங்கையில் பதினொரு திட்ட அமைப்புகளினை நிர்மாணிப்பதற்கு சோவியத் யூனியன் உதவுகிறது. இந்நிர்மாண வேலைகள் பூர்த்தியானதும் சோவியத் யூனியனிடமிருந்து இலங்கை மேலும் இயந்திரங்களையும், உபகரணங்களையும் வாங்கும்.

# இருதய மாற்று அறுவைசிகிச்சை

## ரஷ்யாவில் பரிசோதனை

மாஸ்கோ, ஜூலை 18

'இறந்தவர்களின் இருதயங்களைத் துடிக்கச் செய்யவும், அவற்றை மாற்று இருதய அறுவைச் சிகிச்சைக்குப் பயன்படுத்தவும் எமது விஞ்ஞானிகள் தீவிரமாகப் பணியாற்றி வருகின்றனர்'' என்று பிரபல சோவியத் பேராசிரியர் அலெக்ஸாந்தர் விஸனெவ்ஸ்கி தெரிவித்துள்ளார்.

வெகுவிரைவில் இப்பணி நிறைவேறுமென்று தெரிவித்த அவர், ''செயற்கை இரத்த ஓட்ட முறையின் மூலம் இத்துறையில்வெற்றி பெறலாம் என்பதைப் பரிசோதனைகள் காட்டுகின்றன'' என்றார்.

வர்த்தக

# பரீட்சையில் சித்திபெற்றோர் விபரம்

உடுவில், வியாழன்

1967-ம்ஆண்டு டிசெம்பர் மாதம் இலங்கைப் பரீட்சைப் பகுதியினரால் நடத்தப்பட்ட வர்த்தக தராதரப் பத்திரப் பரீட்சைக்கு சுமார் 150 பேர் தோற்றினர். இவர்களில் தமிழ் மொழிமூலம் சித்தியடைந்தவர்கள் நான்கு பேர் மட்டுமே 1966 டிசம்பரில் நடந்த பரீட்சையில் தமிழ் மொழியில் ஐந்துபேர் சித்தியடைந்திருந்தனர்.

இம்முறை நடைபெற்ற பரீட்சையில் சித்தியடைந்துள்ள நால்வரில் மூவர் யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களாவர்.

சிங்கள மொழியில் கொழும்பு நிலையத்தில் 23 பேரும், குருநாகல் நிலையத்தில் மூன்று பேரும் காலி நிலையத்தில் 9 பேரும் சித்தியடைந்துள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தில் சித்தியடைந்த 4 தமிழ் பரீட்சார்த்திகளின் விபரம் வருமாறு:

முத்துக்குமாரு நடராசா, விசுவநாதஐயர் பரிபூரணானந்த சர்மா, தயாபரம் பிள்ளை கௌரியம்மாள், பொன்னம்பலம் செல்லையா சிதாலெட்சுமி.

# குருக்கள்மீது புகார்


அளவெட்டி, வியா.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் 16-ம் திருவிழா வன்றுகோவிலுக்குள் செல்லவிடாது தடுத்ததாக மூவர் பொலிஸில் புகார் செய்துள்ளனர். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்குள் செல்வதை தடுத்ததாக சி. கணேசன், எம். நாகரத்தினம், வி. துரைரத்தினம் என்பவர்கள் முன்னாள் வவுனியா எம். பி. திரு. ஸி. சுந்தரலிங்கம், பிரதமகுருவும் மானேஜருமான பிரமஸ்ரீ க. துரைச்சாமிக் குருக்கள்மீதும் மாவிட்டபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக பொலிஸ் நிலையத்தில் புகார் செய்தனர்.

இவர்கள் மீது காங்கேசன்துறைப் பொலிசார் சமூகஏற்றத்தாழ்வு சட்டத்தின் கீழ் விரைவில் வழக்குத் தொடருவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30



ரகுநாதன்-சந்திரகலா
நடித்த
**நிர்மலா**
எம். ஜி. ஆர். பிலிம்ஸ்
வெளியீடு

ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
நாகேஷ் — விஜயநிர்மலா
நடித்த
பணமா பாசமா

REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P M
Tony Young
Dan Duryea
in
**TAGGART**


# 'கைத்தொழில்கள் மூலம் வேலையின்மைப்பிரச்னை நீங்கும்'

இளவாலை, வியா.

''தொழிற்பயிற்சி பெற்று கைத்தொழில்கள் மூலம் வேலையில்லாப் பிரச்னையைப் போக்கலாம். அதற்கு விஞ்ஞான தொழில்நுட்ப ரீதியில் உருவாக்கப்படும் பொருட்காட்சிகளை உருவாக்கி மாணவர்களை ஊக்குவித்து உற்சாகமூட்ட வேண்டும் ஜப்பான் அமெரிக்கா போன்ற மேல்நாடுகளிலும் பொருட்காட்சிகளை ஏற்படுத்தி, அதன்மூலம் கைத்தொழில்களை வளர்த்து நாட்டின் பொருளாதாரத்தையும் பெருக்குகிறார்கள்''

இவ்வாறு தொண்டைமானாறு மகாவித்தியாலயத்தில் பொருட்காட்சி ஒன்றைத் திறந்துவைத்துப் பேசும்போது, பருத்தித்துறை எம். பி திரு. க. துரைரத்தினம் கூறினார்.

கல்வி இலாகாவின் நூற்றாண்டு விழாவை யொட்டியும், தொண்டைமானாறு மகாவித்தியாலயத்தின் ஐம்பதாவது ஆண்டு பொன் விழாவை யொட்டியும் இக் கல்லூரியின் ஆசிரிய மாணவர்களால் இப்பொருட்காட்சி ஒழுங்குசெய்யப்பட்டது.

கல்லூரி அதிபர் திரு. வி. தம்பிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு துரைரத்தினம் கல்லூரியின் வளர்ச்சியைப் பாராட்டினார்.

வடமாநில விஞ்ஞான வகிசோதகர் திரு. எம். அற்புதநாதன் பேசுகையில், ஏட்டுக் கல்வியிலும் பார்க்க இப்படியான பொருட் காட்சிகளும், செய்கை முறைகளும் தான் கல்வி கற்பதற்கு சிறந்ததும், இலகுவான வழியுமாகும் என்றார்.

நம் நாட்டில் எடுக்கக் கூடிய பல மூலப் பொருட்களைக் கொண்டு பலவிதமான நவீன பொருட்களை உருவாக்கலாம் ஜப்பான் போன்ற நாடுகளைப் போல் நாமும் இங்கு குடிசைக் கைத்தொழில்களை வளர்க்க வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

இப்பொருட்காட்சியில் விஞ்ஞானம், புவியியல், சரித்திரம், ஓவியம், கைப்பணி, மின்சாரம், சுகாதாரம் போன்றவை சம்பந்தமான பல பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன.


**MANOHARA**
JAFFNA
Daily at
4-45, 7-00, 9-45 p.m.
Christopherlee
in
BRIDESO F
FUMANCHU
From 23-7-68
ARZOO..

மானிப்பாய்
வெஸ்லி
தினசரி 6-30, 9-30.
பிரீ போயா, போயா 2-30
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
நடித்த
முகராசி


## இன்றைய பலன்

(19-7-68)

ஆடி மீ 4 உ
வெள்ளிக்கிழமை

திதி- நவமி பகல் 8-38 மேல் தசமி.

நட்சத்திரம்- பரணி இரவு 7-56 மேல் கார்த்திகை.

ராகுகாலம் - 10-31 12-01.

சுபநேரம் - 6-01—7-31.

இன்று பிறந்தவர்களுக்கு: பக்கத்திலேயே பகைவர் பதுங்கியிருப்பர். எந்த விடயத்திலும் உஷாராக இருப்பது நன்று. முதியவர் ஒருவர் உமக்குப் பூரண ஒத்துழைப்பைத் தருவார். பெண்கள் வாழ்க்கையில் அவப்பெயருக்கு இடமேற்படலாம். கடற்தொழிலாளர்கள் தங்கள் தொழிலில் கவனம் செலுத்த வேண்டும். வியாபாரிகளுக்கு மந்த நிலையே காணப்படும். புதிய முதலீட்டைத் தவிர்க்கவும். தொழில் புரியும் இடத்தில் தொல்லைகள் உருவாகலாம்.

மேஷம்- நலிவுக்கு இடமுண்டு, நாவடக்கம் நன்று
ரிஷபம்- நிதியில் அபிவிருத்தி, நிம்மதி பிறக்கும்.
மிதுனம்-அவசர முடிவு, அறிவுக்குத் தடை.
கடகம்- தாய் வழிச் சுகம், தனத்துடன் வாழ்வு.
சிம்மம்- பந்தமும் பாசமும் பண்புடன் சேரும்.
கன்னி- வேவுக்கணை தொடுப்பர், விழிப்புடன் இரு.
துலாம்- தாம்பத்தியம் சிறக்கும், தனமும் சேரும்.
விருச்சிகம்- கொடுக்கல் வாங்கல் குழப்பத்தில் முடியும்.
தனுசு- குருவிசுவாசம், குறிக்கோளில் வெற்றி.
மகரம்- அயராத உழைப்பு, ஆதரவு பெருகும்.
கும்பம்- மக்கள் புகழ், மதிப்பும் உயரும்.
மீனம்- சிந்தனைப்புதிர், சிறிவரும் கோபம்.

சோதிடக்கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை


5-வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி
(கொழும்பு)
2.00 மாலை 6.00, 9.30.
இந்திய ஜனாதிபதி பரிசு பெற்ற சிறந்தபடம்.
காதல் மன்னன்
★ ஜெமினி கணேசன்
★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ்
நடித்த
ஏ. வி. எம்.
புரொடக்ஷன்ஸ் **ராமு**

இப்பொழுது திரையிடப்படுகிறது!
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, 10-00.
ஜேம்ஸ் பொண்ட்
★ ஜெய்சங்கர்
★ எல். விஜயலக்ஷ்மி
★ மனோகர்
நடித்த
**வல்லவன் ஒருவன்**


# இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

**வெள்ளி 19—7—68**

[செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீற்றர் அல் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 ஒலிப்பாடல்கள், 7-30 பண்ணுரித்தமிழ், 8-00 குரான், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் அல் 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீற்றர் அல் 61 மீற்றர்

மாலை 5-00 கல்விச் சேவை, 5-15 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 பஜனை, 6-45 பர வளம், 7-00 இராமசஞ்சிகை, 7-30 வாத்தியஇசை, 7-45 தொடர் நாடகம், 8-00 மூலிகைம் நிகழ்ச்சி, 9-30 பல்கலைக்கழக மாணவருக்கான விரிவுரை, 9-45 உரைச்சித்திரம், 10-00 நேயர்விருப்பம்.

## அதிசய பசுக்கன்று

சங்கானை, வியாழன்

சங்கானையைச் சேர்ந்த திரு. என் காசிப்பிள்ளைக்குச் சொந்தமான பசு இரண்டு தலைகளுடன் கூடிய கன்றை ஈன்றுள்ளது. இதை அநேகர் பார்த்துச்சென்றனர்.


### இராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 17-ம் பிரிவின் படியான அறிவித்தல்

எல் 1941 (1) 1961 இன் 60ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (அத்தியாயம் 257) 17 (1)ம் பிரிவின் படியான 1968ம் ஆண்டு ஆனி 28ம் திகதிய 14,808ம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, தெல்லிப்பழைக் கிராமச்சபை சம்பந்தமான அறிவித்தல் இத்தால் ரத்துச்செய்யப்படுகின்றது.

க. முருகவேல்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
உள்ளூராட்சி அமைச்சு.
யாழ்ப்பாணம் 10-7-68.

### இராமச்சபைகள் கட்டளைச் சட்டம் 17-ம் பிரிவின் படியான அறிவித்தல்

என் 1941 (2) 1961ன் 60ம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்ட படியான கிராமச் சபைகளின் கட்டளைச் சட்டத்தில் (அத்தியாயம் 257) 17 (1)ம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரபலத்தைக் கொண்டு சுப்பிரமணியம் முருகவேல், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் ஆகிய நான் இந்த அட்டவணையின் பத்தி 1ல் குறிக்கப்பட்டுள் கிராமச்சபைகள் ஒவ்வொன்றினதும் அந்த அட்டவணையில் பத்தி 11ல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதியில், அந்த அட்டவணையில் 111ல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில், அந்த அட்டவணையில் பத்தி 4ல் குறிக்கப்பட்ட இடத்தில் கூட்டுகிறேன்.

க. முருகவேல்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்.
யாழ்ப்பாணம்.
உள்ளூராட்சி அமைச்சு,
யாழ்ப்பாண அலுவலகம்,
யாழ்ப்பாணம், 10-7-68.

அட்டவணை

| பத்தி 1 இராமசபைகளின் பெயர் | பத்தி 11 திகதி | பத்தி 111 நேரம் | பத்தி 4 இடம் |
|---|---|---|---|
| தெல்லிப்பழை | 26-7-68 | 11-30 மு. ப. | இராமச்சபை அலுவலகம் தெல்லிப்பழை. |

GP 6568

### இராமச்சபைகள் கட்டளைச்சட்டம் 17ம் பிரிவின்படியான அறிவித்தல்

எல் 1985 - 1961ன் 60ம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான இராமச்சபைகளின் கட்டளைச் சட்டத்தில் (அத்தியாயம் 257) 17 (1)ம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு சுப்பிரமணியம் முருகவேல், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் ஆகிய நான் இந்த அட்டவணையின் பத்தி 1ல் குறிக்கப்பட்டுள்ள இராமச்சபையினது அந்த அட்டவணையின் பத்தி 11ல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதியில், அந்த அட்டவணையின் பத்தி 111ல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் அந்த அட்டவணையின் பத்தி 4-ல் குறிக்கப்பட்ட இடத்தில் கூட்டுகின்றேன்.

க. முருகவேல்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
உள்ளூராட்சி அமைச்சு.
யாழ்ப்பாண அலுவலகம்,
யாழ்ப்பாணம், 14-7-68.

அட்டவணை

| பத்தி 1 இராமச்சபையின் பெயர் | பத்தி 11 திகதி | பத்தி 111 நேரம் | பத்தி 4 இடம் |
|---|---|---|---|
| மயிலிட்டி | 26-7-68 | 12-30 பி. ப. | இராமச்சபை அலுவலகம் மயிலிட்டி. |

GP 6624

### இராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 17ம் பிரிவின் படியான அறிவித்தல்

என் 1986- 1961ன் 60ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (அத்தியாயம் 257) 17 (1)ம் பிரிவின் படியான 1968ம் ஆண்டு ஆனி 28ம் திகதி 14808ம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் இரணைதீவு இராமச்சபையை பொறுத்தமட்டில் ''இராமச்சபை அலுவலகம், இரணைதீவு'' என்பதற்குப் பதிலாக ''இராமச்சபை அலுவலகம், பல்லவராயன்கட்டு'' என்று பத்தி 4ன் கீழ் இத்தால் திருத்தப்படுகிறது.

க. முருகவேல்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்
உள்ளூராட்சி அமைச்சு,
யாழ்ப்பாணம், 12-7-68.
GP6626


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

தெசவாளர்கள்:

தேர்ச்சி பெற்ற ஆண், பெண் நெசவாளர்கள் ஈழநாடு அலுவலகத்துக்குச் சமீபத்திலுள்ள நெசவகத்துக்குத் தேவை. விண்ணப்பிக்கவும்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 124

விவசாய அனுபவமுள்ள மேற்பார்வையாளரும், விவசாய அனுபவமுள்ள தொழிலாளரும், அக்கராயன்-கோணாவில் பகுதியில் உள்ள காந்தி சேவா சங்க காந்திக்குத் தேவை- நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். கௌரவ நிர்வாகி, காந்தி நிலையம், உருத்திரபுரம். 1249

நிர்வாக அனுபவமுள்ள 45 வயதுவரையில் உள்ள தமிழ் ஆங்கிலம் தெரிந்த ஒருவர் காந்திநிலைய மாணவர் இல்லத்துக்குத் தேவை உத்தியோக ஓய்வு பெற்றவர் விரும்பப்படுவர். கௌரவ நிர்வாகி, காந்தி நிலையம், உருத்திரபுரம். 1248

யாழ்ப்பாணம் மலையாளம் புகையிலை ஐக்கிய வியாபாரச்சங்கத்திற்கு பீடி தயாரிப்பதில் அனுபவமுள்ளவர்கள் தேவை. சேர விரும்புவோர் தங்கள் பெயர், விலாசம் முதலியவற்றை சங்கத்தில் 31-7-68க்குமுன் பதிவு செய்யவும்! ஆ. நடராசா, முகாமையாளர், தெல்லிப்பழை மேசன் ரோட், யாழ்ப்பாணம். 1247

## தேவை

சந்தூர் தொழிற்சாலையில் வேலைசெய்ய பெண்பிள்ளைகள் தேவை. உடனே நேரில் மனுச்செய்க. அரஸ்கோ இன்டஸ்றீஸ், பருத்தித்துறைவீதி, நல்லூர். 1253

**WANTED**

Wanted for Co operative Hospital, Moolai. Chulipuram a qualified Matron and qualified Nurses. Apply to President before 31-7-68 giving details of qualifications and experience Terms of employment will be made attractive to suitable candidates & will be finalized at time of interview. 1252

## விற்பனைக்கு

காணி;

நகரசபைஎல்லையில், காங்கேசன்துறைவீதி, கொக்குவிலில் சிறு வீடு, கிணறு முதலிய வசதிகளுடன் 1 3/4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு விளம்பர இல: 1243 ஈழநாடு மே/பா, த. பெ. எண் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 1243

விதைநெல்:

விதைநெல்லு: மேட்டுநிலக் காணிகளுக்கு கமத்தொழில் இலாகாவால் விசேடமாக சிபார்சு செய்யப்பட்ட 'டிக்வி' இன விதைநெல்லு [கலபோகம்] விற்பனைக்கு உண்டு. தேவைக்கு விண்ணப்பிக்கவும்; கௌரவநிர்வாகி, காந்தி நிலையம், உருத்திரபுரம். 1250

# 2-வது இடத்தை 'சுண்டிக்குளி' கைப்பற்றியது

(நேற்றைய்த் தொடர்ச்சி)

யாழ். மாவட்ட பெண்கள் பாடசாலைகளுக்கிடையில் யாழ்ப்பாணம் மகளிர் பாடசாலை விளையாட்டுச் சங்க ஆதரவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிக்கு முன்னாள் யாழ்மாநகர சபை ஆணையாளர் திரு. ஹட்சன் செல்வராசா பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார். திருமதி ஹட்சன் செல்வராசா வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்கு பரிசில்களை வழங்கினார். இப்போட்டியின் முடிவுகள் வருமாறு:—

## மேற்பிரிவு

உயரம் பாய்தல்: பி. வீரசிங்கம் [பண்டத்தரிப்பு ம. உ. பா), எஸ். சங்கரப்பிள்ளை 'பண்டத்தரிப்பு ம. உ பா] எஸ். பி. நிர்மலாதேவி (மானிப்பாய் பெ. பா), ஏ. பொன்னுத்துரை (சுண்டிக்குழி], ஐ ராஜேந்திரா [சுண்டிக்குழி] ஏ, பதிமநாதன் [வேம்படி].

குண்டெறிதல்; எம் சந்திரா [நடேஸ்வரா க. 28 அடி 2 அங். புதிய சாதனை],

எம். பெரியதம்பி (வேம்படி), எஸ் கணேசன் [வேம்படி] பி. ஸ்ரீரங்கநாயகி [நடேஸ்வரா க.], எஸ். நிர்மலா [மகாஜனா க.], கே. பூபதி [க. ம. மா வி.]

பரிதிவட்டம் வீசல்: எம். சந்திரா [நடேஸ்வரா க. 79 அடி 5 1/4 அங். புதிய சாதனை] எம். பெரியதம்பி [வேம்படி], எஸ். கணேசன் [வேம்படி], எஸ். பதிமாவதி [யா. சை. ம. மா]. எம். முருகவேணி [மகாஜனா க.], எஸ். நிர்மலா [மகாஜனா க.]

நீளம்பாய்தல்: பி. சுப்பிரமணியம் [ப ம உ பா], எஸ். ராசேஸ்வரி (மே உ பா) கே. சந்திரகுமாரி [யா சை ம மா) ஜி நகுலேஸ்வரி [க ம மா வி] ரி செங்கொழுந்து [சுண்டிக்குழி) எம் சிவகுருநாதன் (வேம்படி)

[நாளை முடியும்]

## காணவில்லை

நாலைச் சயிற்றில் கோர்த்த 15 சாவிகளவரை திருநெல்வேலி பரமேஸ்வராறோட்-பலாலி றோட் சந்திக்கும், பரமேஸ்வரா ஒழுங்கை-பலாலி றோட் சந்திக்குமிடையில் பலாலி றோட்டில் கைதவறிப்போய் விட்டது. கண்டெடுத்தால் தயவு செய்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும், தகுந்த சன்மானம் வழங்கப்படும். 1251

# கேள்விவிளம்பரம்

வெள்ள நிவாரண வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் 31-7-68-ம் திகதி காலை 9 மணிக்கு என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ரூபா 50/- பிணையாகவும் ரூபா 10/- கட்டுப்பணமாகவும் கட்டி கந்தோரில் பெற்றுக்கொள்ளும் பத்திரத்தில் நிரப்பி அனுப்பவேண்டும். கட்டுப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

30-7-68 பகல் 2 மணி வரையும் குறித்த பத்திரம் கி. ச. கந்தோரில் என்னால் வழங்கப்படும்.

சி. முத்தையா
செம்பியன்பற்று
கி. ச. தலைவர்.

கி. ச. கந்தோர்.
செம்பியன்பற்று.
18-7-68. .882

# சந்தனம்

கோயில் தேவைகளுக்கும்
மங்கள வைபவங்களுக்கும்
இயந்திரத்திரைல் அரைத்த
**பச்சை சந்தனம்**
எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம்.

**எஸ். சுப்பிரமணியம்**
**அன் கொம்பனி**

58, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.
160, செட்டியார் தெரு கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068



# இன்றுமகத்தான ஆரம்பம்

யாழ். வின்ஸர் வெண்திரையில்
இன்று காலை 10-30 காட்சியுடன் ஆரம்பமாகிறது
தினசரி 4 காட்சிகள்

மக்கள் திலகம்
**எம். ஜி. ராமச்சந்திரன்**
**பி. சரோஜாதேவி**
பி. எஸ். வீரப்பா
மனோகர்
என். எம். நம்பியார்
அசோகன்
ஜெயலலிதா
நாகேஷ்
எம். ஜி. சக்கரபாணி
கே. ஆர். ராமசாமி
சகுந்தலா
ஆகியோர் நடித்த

# அரச கட்டளை

முற்றிலும் மாறுபட்ட
புரட்சிகரமான சித்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருவர் பயமுறுத்தியதாக அர்ச்சகர் இருவர் புகார்

யாழ்ப்பாணம், வெள்ளி
யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்திற்கு வெளியில் நேற்றுக்காலை சுந்தரமூர்த்தி ஐயரும், நகுலேஸ்வர ஐயரும் இருவரால் பயமுறுத்தப்பட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை விசாரணை முடிந்து வி. சுந்தரலிங்கம் கோர்ட்டிற்கு வெளியில் வந்ததும், சுந்தரமூர்த்தி ஐயர் தம்மை இருவர் பயமுறுத்தியதாக தெரிவித்து அவ்விருவரையும் சுட்டிக்காட்டினார்.

உடனடியாக வி. சுந்தரலிங்கம் பொலிஸாருக்கு அறிவித்துவிட்டு வெளியில் வந்தபோது இருவரும் மறைந்துவிட்டனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ராஜேஸ்வரனிடம் நேராகச் சென்று சுந்தரமூர்த்தி ஐயர் முறைப்பாடு செய்தார். ஐயருடன் சி. சுந்தரலிங்கமும், திருமதி சுந்தரலிங்கமும் சென்றிருந்தனர்.

திரு. சுந்தரலிங்கத்தை சிலர் தாக்க முயற்சிப்பதாக மாவிட்டபுர கந்தசுவாமி கோவில் தொண்டர் ஒருவர் தெரிவித்ததைத் தொடர்ந்து, பொலிஸ் நிலையத்திலிருந்து திரு. சுந்தரலிங்கமும் திருமதி சுந்தரலிங்கமும், மற்றொரு காரில் மாவிட்டபுரம் நோக்கி புறப்பட்டனர்.

# ஆலயப்பிரவேசமே தமது நோக்கமாம்

யாழ்ப்பாணம், வெள்ளி
"ஆலயப் பிரவேச இயக்கம் தொடர்ந்து தினமும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கார்த்திகை திருவிழாவின் போது ஆலயப் பிரவேசம் உச்சக் கட்டத்தை அடையும்.

தீண்டாமை ஒழிப்புவெகுஜன இயக்கத்தை சேர்ந்த ஒருவர் நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆலயத்திற்குள் செல்ல வேண்டும் என்பதுதான் தமது நோக்கம் என்றும் சந்தர்ப்பம் கிடைக்கும் போது அதை நிறைவேற்றுவோம் என்றும் அவர் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: தினமும் வெகுஜன இயக்கத்தினர் ஆலயத்திற்கு சென்று, நிலைமையை அவதானித்துக் கொண்டிருப்பார்களென்றும், கதவு திறக்கும் போது உள்ளே செல்வார்களென்றும் கூறினார்.

திருவிழாக்களை குழப்புவதோ, பூசைகளை தடை செய்வதோ, பக்தர்களை புண்படுத்துவதோ, தமது நோக்கமல்லவென்றும் ஆலயப் பிரவேசம் தான் தமது நோக்கமென்றும் கூறினார்.

கார்த்திகை திருவிழாவின் போது, கதவு திறக்கப்படாவிட்டால், தேர் திருவிழாவிற்கு நிச்சயம் கதவு திறக்கப்படுமென்றும் அன்று ஆலயப்பிரவேசம் நடந்தே தீருமென்றும் கூறினார்.

# வழமைபோல் சிறப்பாக ஊற்சவங்கள் நடைபெறும்

## திரு. சுந்தரலிங்கம் நம்பிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி
"மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தேர்த் திருவிழா வழக்கம்போல இம்முறையும் சிறப்பாக நடைபெறும். சுவாமி தேரில் பவனி வரத்தான் போகிறார். அதற்கான ஏற்பாடுகளை எல்லாம் செய்துவிட்டோம்"

முன்னாள் வவுனியா எம். பி.யும், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தொண்டர்சபைத் தலைவருமான திரு. சி. சுந்தரலிங்கம் நமது நிருபரிடம் மேற்கண்டவாறு நேற்றுத் தெரிவித்தார்.

திரு. சுந்தரலிங்கத்துடன் திருமதி சுந்தரலிங்கமும் அருகில் அமர்ந்து கவனமாக அவர் கூறுவதைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

திரு. சுந்தரலிங்கம் மேலும் கூறியதாவது:

இன்று முதல் 26-ந் திகதி வரை திருவிழாக்கள் தொல்லைகளின்றி சிறப்பாக நடைபெறும். சுவாமி வெளி வீதி வந்து சுற்றிச் செல்வதற்கும் தொண்டர்கள் ஒழுங்கு செய்துள்ளார்கள். வழக்கம்போல் பெண்கள், குழந்தைகள் திருவிழாக்களுக்கு அச்சமின்றி வரலாம்.

கடந்த 15 தினங்களாக தான் இதில் முன்னின்று அடியவர்களின் இரத்தக்களறி ஏற்படாமல் திருவிழாக்களும், பூசைகளும், ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. தொடர்ந்தும் திருவிழாக்கள் சச்சரவின்றி நடைபெறும்.

கடவுளில் நம்பிக்கையில்லாத ஒரு சிலர் திருவிழாக்களை குழப்ப நினைப்பதும், பூசைகளைத் தடை செய்ய முயற்சிப்பதும் மனம் வருந்தக்கூடிய விஷயம்.

பூசைகள் ஒழுங்காக நடைபெறவும் திருவிழாக்கள் வழக்கம்போல் நடைபெறவும் சைவ அன்பர்கள் ஒத்துழைக்கவேண்டும். குழப்பமின்றி எதுவுமின்றி வருடாந்த உற்சவம் ஒழுங்காக நடைபெறுவதையே அதிகமான மக்கள் விரும்புகிறார்கள். அதற்காகத்தான் நான் பாடுபடுகிறேன்.

தேர்த்திருவிழா உட்பட முக்கிய திருவிழாக்கள் வழக்கம்போல் ஒழுங்காக நடைபெறுவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்வது சம்பந்தமாக அரசாங்க அதிபரையும், பொலிஸ் அதிபரையும் சைவமக்கள் சார்பில் சந்திக்கவிருக்கின்றனர்.

## சத்தியாக்கிரகம் நடைபெறவில்லை

அளவெட்டி, வியாழன்
மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் இன்று ஹரிஜனங்கள் சத்தியாக்கிரகம் நடைபெறவில்லை. ஆனால் கோவில் கதவுகள் பூட்டப்பட்டிருந்தன. திருவிழா உள்ளேயும், 2-ம் வீதியிலும் நடைபெற்றது. கதவுகள் பூட்டப்பட்டிருந்தாலும் பக்தர்கள் கோவிலுக்குள் அதிகமாகவே காணப்பட்டார்கள். ஆனால் சுமார் 15 ஹரிஜனர்கள் கோவில் வாசலில் [illegible] தொடர்ந்து இருந்தனர்.

# இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி
வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் தேவிமஹோற்சவம் இன்று கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகிறது.

காலை 9.30 வஸந்த மண்டப பூஜையும் முற்பகல் 10-15 க்கு கொடியேற்றமும் நடைபெறும். மாலை 6 மணியிலிருந்து 7-30 வரை 'அலைபுக்கடல்' திருப்பூகுடி வி. சே. ஆறுமுகம் 'ஔவையும் ஐயரும்' என்பதுபற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். இரவு 7-30 க்கு வஸந்த மண்டப பூஜையும் சுவாமி வெளிவீதி உலா வருதலும்.

## புதிய காகித அட்டை ஆலை

பம்பலப்பிட்டி, வியா.
வாழைச்சேனை கூட்டுஸ்தாபனத்தின் காகிதஅட்டை ஆலைக்கான கட்டிட அடிக்கல்லை கைத்தொழில் மீன்பிடி அமைச்சர் திரு பிலிப் குணவர்த்தனா நாளை மாலை 5 மணிக்கு நாட்டிவைப்பார்.

இதில் கலந்துகொள்ளுமாறு சகல கூட்டுஸ்தாபனத் தலைவர்களுக்கும், மட்டக்களப்புப் பகுதி எம். பிக்களுக்கும் அரசாங்க உயர்தர அதிகாரிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளன.

33 கோடி ரூபா செலவில் கட்டப்படும் இக்கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொள்ளுமுகமாக வாழைச்சேனைக்கு வரும் கைத்தொழில் அமைச்சரை வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலைக் கூட்டுஸ்தாபன அதிபர் திரு கே. வி. தம்பிராசாவும் டைரக்டர்களும் வரவேற்பர்.

ஜேர்மன் தூதுவரும் இவ்வைபவத்தில் கலந்துகொள்வர்.

## 203-வது குலுக்கல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 06 J 0307 | 41 A 0929 |
| 08 H 0209 | 22 X 0864 |
| 34 W 0176 | 34 X 0830 |
| 09 J 0485 | 19 U 0122 |
| 23 K 0025 | 18 B 0256 |
| 39 F 0566 | 22 F 0602 |
| 16 Z 0958 | 22 T 0589 |
| 16 W 0396 | 29 R 0276 |
| 22 N 0092 | 27 T 0654 |
| 28 U 0722 | 09 D 0936 |
| 12 Y 0079 | 28 C 0442 |
| 01 L 0836 | 28 U 0553 |
| 04 S 0284 | 26 Y 0726 |
| 05 P 0186 | 16 J 0955 |
| 21 P 0543 | 05 Z 0366 |
| 26 D 0568 | 28 F 0637 |
| 07 Q 0776 | 15 C 0078 |
| 35 E 0117 | 12 K 0177 |
| 23 P 0500 | 04 O 0185 |
| 33 C 0140 | 35 L 0997 |
| 33 A 0513 | 16 C 0939 |
| 02 Z 0272 | 18 V 0007 |
| 02 X 0415 | 13 R 0243 |
| 02 V 0290 | 24 A 0979 |
| 23 C 0748 | 30 L 0403 |
| 33 L 0856 | 25 Z 0755 |
| 33 N 0326 | 34 B 0816 |
| 30 L 0193 | 02 B 0127 |
| 15 B 0031 | 14 B 0007 |
| 38 O 0329 | 21 N 0453 |
| 38 P 0011 | 38 E 0896 |
| 32 G 0005 | 24 A 0861 |
| 17 K 0006 | 21 G 0911 |
| 12 B 0130 | 16 H 0842 |

இவை உறுதிப்படுத்தப் படவேண்டியவை.

## உரியவர் யார்?

யாழ்ப்பாணம், வெள்ளி
சைக்கிள் ஒன்று வெலிங்டன் தியேட்டருக்கு அருகாமையிலுள்ள ஒழுங்கையில் கண்டெடுக்கப்பட்டு எம். கதிர்காமநாதனால் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

# யாழ். நகரில் கடைகள் உடைத்து திருட்டு

## 6 பேர் கைது: மற்றும் ஒரு கோஷ்டியை பொலிஸ் தேடுகிறது

யாழ்ப்பாணம், வெள்ளி
யாழ்ப்பாண நகரின் பல பகுதிகளிலும் தற்போது இரவு நேரங்களில், கடைகள் உடைத்துப் பொருட்கள் களவாடப்படுவது அதிகரித்துள்ளது. கடந்த 10 தினங்களுக்குள் மட்டும் சுமார் 15 களவுகள் இப்படி நடந்திருப்பதாகப் பொலிஸில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வண்ணார்பண்ணை, இலுப்பையடிச் சந்தி, பிரவுண் வீதி, ஆனைப்பந்தி ஆகிய இடங்களில் இக்களவுகள் நடைபெற்றுள்ளன. இக்களவுகளில் மொத்தம் ஒரு லட்சத்துக்கும் அதிகமான ரூபா பெறுமதியான பொருட்கள் களவுபோயுள்ளவாம்.

இக்களவுகள் சம்பந்தமாக 6 வாலிபர்களைப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்துள்ளனர். களவு போன சில பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

திட்டமிட்டுத் திருட்டு நடத்தும் வாலிபர்களைக் கொண்ட கோஷ்டி ஒன்றை இதுசம்பந்தமாகப் பொலிஸார் தேடிவருகின்றனர். இக்களவுகளைத் தொடர்ந்து. இரவு நேரங்களில் ரோந்து சுற்றவென குற்றத்தடுப்புப் பகுதியை பொலிஸார் அதிகரிப்பட்டுள்ளனர். (கா. நி)

# 'மாவட்ட சபைகளை முஸ்லிம்கள் ஆதரிப்பர்'

## அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை என்கிறார் ஜனுப் முஸ்தபா எம். பி.

கொழும்பு, வெள்ளி
"முஸ்லிம்கள் மாவட்ட சபை மசோதாவை ஆதரிப்பார்கள். இதுசம்பந்தமாக அவர்கள் அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை. சிலர் தமது சொந்த நன்மை கருதியே வீண் பிரசாரங்களில் ஈடுபடுகிறார்கள்."

இவ்வாறு ஆட்சிமன்றத்தில் நேற்று பொத்துவில் எம். பி. ஜனுப் எம். எம். முஸ்தபா கூறினார்.

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைமீது பேசுகையிலேயே ஜனுப் முஸ்தபா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:-

எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஜனுப் பதியுதீன் மாமூது மாவட்டசபை சம்பந்தமாக மக்களிடையே தவறான பிரசாரத்தை செய்துவருகின்றார். மக்களை தப்பகத்துக்குத் திருப்பும் முயற்சியாகவே இவ்வித தவறான பிரச்சாரங்கள் செய்யப்படுகின்றன.

மாவட்டசபை வெள்ளை அறிக்கையில் எல்லாவித அபாயங்களும் நீக்கப்பட்டு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இவ்வித மாவட்ட சபைகளால் எவ்வித அபாயமும் ஏற்படாது. பிரதமர் மாவட்ட சபை மசோதாவைக் கொண்டுவந்தால் முஸ்லிம்கள் இதற்கு ஆதரவளிப்பார்கள்.

## அரசாங்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாறும் இப்படிச் செய்தால் ஆலயத்தின் சத்தியாக்கிரகம் நடைபெறுமென பாரித்துக் கொள்வதாகவும் பொலிஸ்அதிபர் யோசனை கூறியதாகத் தெரிகிறது.

ஆனால் நேற்று மாலை யாழ்ப்பாணம் கச்சேரியில் வடபகுதி அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவும் வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர் சுந்தரலிங்கமும் நடத்திய ஆலோசனையில் கலந்து கொண்ட முன்னாள் வவுனியா எம். பி. யும், மாவை ஆலய தொண்டர்சபைத் தலைவருமான திரு. சி. சுந்தரலிங்கமும் திருவிழா முடிவடைந்த பின்னரே எந்த யோசனைகளையும் பரிசீலனை செய்யமுடியுமென கூறியதாகவும் அறியப்படுகிறது.

## மாஜி எம். பி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்மனுதாரரான சுந்தரலிங்கம் சார்பில் ஆஜரான அட்வகேட் சி. பொன்னம்பலம், தடைஉத்தரவு விசாரணையை விரைவில் நடத்தும்படி நீதிபதியிடம் கோரி நீண்டநேரம் வாதித்தார்.

மனுதாரரான கணேசன் சார்பில் ஆஜரான அட்வகேட் சி. கதிரவேலுப்பிள்ளை மனுதாரரான கணேசன் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியிலிருப்பதாகத் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து நீதிபதி விசாரணையை அடுத்த மாதம் 5-ம் திகதிக்கு ஒத்திப் போட்டு அதுவரை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்குள் வாதியான கணேசன் வழிபடச் செல்வதைப் பிரதிவாதியான சி. சுந்தரலிங்கம் தடுக்கக்கூடாதென உத்தரவிட்டார்.

## தமிழர்களுக்......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வருவதற்கு காரணமாக இருந்தவர்கள் தமிழரசுக் கட்சியினர்.

ஆர். ஜி. வெளிப்படையாகச் செய்வதை எதிர்க்கட்சியினர் இரகசியமாக செய்துவருகின்றனர். சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. சண்முகதாசனுடன் சேர்ந்துகொண்டு இந்த நாட்டை இரத்த வெள்ளத்தில் நாடாக்க முயல்கின்றனர். இது ஒருபோழுதிலும் நடக்காது.

## தீப்பந்தத்தினால் சுட்டதாக வழக்கு

குரும்பசிட்டி, வியா.
மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்குள்ளே ஆலயப்பிரவேசம் செய்ய முயற்சிக்கையில் காங்கேசன்துறையைச் சேர்ந்த ஆறுமுகம் கந்தையா என்பவருக்கு தீப்பந்தத்தினால் சுட்டு காயப்படுத்தியதாக குற்றம் சுமத்தி மாசிலாமணி, விஜேந்திரன் ஆகிய இருவரை இன்று காலை மல்லாகம் தற்காலிக மாஜிஸ்ரேட் திரு. ஆர். இளையபெருமாள் முன்னிலையில் காங்கேசன்துறைப் பொலிஸார் ஆஜர்செய்தனர்.

இரு எதிரிகள் சார்பிலும் ஆஜரான அட்வகேட் திரு. வி. சுந்தரலிங்கம் இருவரையும் பிணையில் விடக்கோரிய விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட மாஜிஸ்திரேட் எதிரிகளை தலா 1000 ரூபா பிணையில் செல்ல உத்தரவிட்டுள்ளார். மேலும் மாஜிஸ்திரேட் இருவரையும் தினமும் நீதிமன்றத்தில் தமது முன்னிலையில் ஆஜராகும்படியும் கட்டளையிட்டார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜூலை மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org